26-01-2012 அன்று நடந்த உரையாடலின் பொழிப்பு

**தலைப்பு : SOPA , PIPA சட்டங்களுக்கு இணையத்தில் எழுந்துள்ள எதிர்ப்பலை**

**தொடக்கவுரையாடல் : மௌ. மதுவர்மன், மு. மயூரன்**

1. SOPA/PIPA என்றழைக்கப்படுபவை, 2011 இல் ஐக்கிய அமெரிக்காவின் கீழவையிலும் (House of Representatives) , மேலவையிலும் (Senate) முன்மொழியப்பட்ட, 2012 ஜனவரி இறுதியில் வாக்கெடுப்புக்கு விடப்பட்டு, நடைமுறைக்கு கொண்டுவரப்படவிருந்த, இணைய பதிப்புரிமை மீறல்களை தடுப்பதற்கும், மீறுபவர்களை தண்டிப்பதற்குமான பாரதூரமான விடயங்களைக் கொண்ட இரு சட்டங்களாகும்.

SOPA - Stop Online Piracy Act, PIPA - Protect Intelectual Property Act

SOPA/PIPA ஆகியவற்றின் முக்கிய இரு பொறிமுறைகள் :

I. பதிப்புரிமை மீறல்களில் ஈடுபடும், அல்லது ஈடுபடுபவர்களுக்கு வசதியளிக்கும் அமெரிக்க உள்நாட்டு, வெளிநாட்டு இணையத்தளங்களுக்கான அமெரிக்க இணையப் பாவனையாளர்களின் அணுகலை (Access) தடுத்தல்.

அ) இது DNS எனப்படும், இணையத்தள முகவரிகளை IP முகவரிகளுக்குத் தொடர்புபடுத்தும் செயற்பாட்டைக் கட்டுப்படுத்துவதன் மூலம் செய்யப்படும்.

ஆ) அவ்விணையத்தளங்கள் தொடர்பான தேடுபொறிகளில் தகவல்களை நீக்குதல் மூலம் செய்யப்படும்.

இதன்மூலம், அந்தகைய இணையத்தளங்களின் பாவனை குறைய, அவர்களின் பணவருவாய் வீழ்ச்சியடையும்

II. பதிப்புரிமை மீறலைச் செய்யும், பதிப்புரிமை மீறலுக்கு வசதி செய்துகொடுக்கும் இணையத்தளங்கள் பணத்தை ஈட்டிக்கொள்ள வசதியளிக்கும் பணப்பரிமாற்றல் சேவைகளை வழங்கும் இணைய நிறுவனங்களான, PayPal, Master Card, VISA போன்ற சேவை வழங்குநர்களை, அவ்விணையத்தளங்களுக்கு அச்சேவைகளை வழங்குவதிலிருந்து தடை செய்தல்..

இதன் மூலமும், அவ்விணையத்தளங்களின் பணவருவாய் வீழ்ச்சியடையும்.

மொத்தத்தில், இந்த இரு பொறிமுறைகளின் மூலமும், பதிப்புரிமை மீறல் நடவடிக்கைகளில் ஈடுபடும் இணையத்தளங்களின், பணவலிமையை குறைத்து, அவர்களை பலவீனமாக்கி, செயற்பாடுகளை முடக்குவது.

அடிப்படையில் SOPA/PIPA மூலம். பதிப்புரிமை மீறுகின்ற விடயங்களைக் கொண்ட இணையத்தளங்களை, இதுவரை கால சட்ட நடவடிக்கைகளையெல்லாம் தவிர்த்து, இலகுவில் முடக்கமுடியும். இது ஒரு 'இணையத் தணிக்கை' என்ற ஆபத்தான நிலைமைக்கான இலகுவழி,

யார் யாரெல்லாம் SOPA/PIPA வை கொண்டுவர விரும்பினார்கள்?
அமெரிக்க Holywood திரைப்படத் துறையினர், இசைத்துறையினர், மருந்து உறப்த்தித் துறையினர் மற்றும் சில பாரிய ஊடக நிறுவனங்கள். அதாவது பதிப்புரிமை என்ற விடயத்தின் மூலம் பெரும் பணங்கொழிக்கும் வியாபாரம் செய்பவர்கள், தங்கள் பணபலத்தின் மூலம், அரசியச் செல்வாக்கின் மூலம், ஆட்சியிலுள்ளவர்களை இவ்வாறு சட்டமியற்றுவதற்கு தூண்டினார்கள்.

SOPA/PIPA வில் பிரச்சினைகள்


1. பதிப்புரிமை மீறல் குற்றைத்தை நீங்கள் புரியாவிட்டாலும், உங்கள் இணையத்தளம் முடக்கப்படலாம். உங்களின் இணையத்தளத்தின் பாவனையாளர் ஒருவர் பதிப்புரிமையை மீறியிருத்தல் போதுமானது

மிகுதி அடுத்த பக்கம்

**அடுத்து வரும் தலைப்புக்கள்**

**போருக்குப் பின் தமிழ் மக்கள் எதிர்நோக்கும் பிரச்சினைகள்**

மாவை. நித்தியானந்தன் | 02-02-2012



ஆண்டன் செக்கோவ்

ஆண்டன் பாவ்லோவிச் செக்கோவ் (Anton Pavlovich Chekhov, ரஷ்ய மொழி: Анто́н Па́влович Че́хов, ஜனவரி 29 [யூ.நா. ஜனவரி 17] 1860 - ஜூலை 15 [யூ.நா. ஜூலை 2] 1904) ஒரு ரஷ்ய சிறுகதை எழுத்தாளரும், நாடகாசிரியரும் ஆவார். இவர், உலக இலக்கியத்தில் மிகப் பெரும் சிறுகதை எழுத்தாளர்களில் ஒருவராகக் கருதப்படுபவராவார். தனது இலக்கியத்துறைப் பணிக்காலத்தின் பெரும்பகுதியில் அவர் மருத்துவத் தொழில் புரிந்து வந்தார்.

செகாவ் மொத்தம் 568 சிறுகதைகளும் நாடகங்களும் எழுதியுள்ளார். இவை 13 தொகுதிகளாக வெளி வந்துள்ளன. அவரது நாட்குறிப்புகளும், கடிதங்களும் தனித்தொகுதிகளாக வெளியாகியுள்ளன. தமிழில் வான்கா, பந்தயம், ஆறாவது வார்டு, நாய்க்காரச் சீமாட்டி போன்ற சில கதைகள் மட்டுமே வந்துள்ளன.

**இவரது நூல்கள்**

* The Shooting Party
* The Steppe
* An Anonymous Story
* Three Years

**சமூக விஞ்ஞான கற்கை வட்டம்**

சமகால அரசியலிலும் சமூக வாழ்விலும் தொழிநுட்பத்திலும் நிகழும் முக்கிய நடப்புக்களை ஆழமாகக் கற்றறிந்துகொள்ளுமுகமாக வாரம் தோறும் வியாழக்கிழமைகளில் பிற்பகல் 5.30 மணிக்கு சமூக விஞ்ஞானக் கற்கை வட்டம் கூடுகிறது.

அரசியல், தொழிநுட்பம், சமூகம் எனப் பல்வேறு பரப்புக்களில் தெரிவு செய்யப்படும் தலைப்புக்களில் ஒவ்வொரு வாரமும் ஆழமான திறந்த கலந்துரையாடல் இடம்பெறும்.

நாம் வாழும் இந்தச் சமூகத்தைக் கற்றறிந்து புரிந்துகொள்ளவும் அப்புரிதலிலிருந்து இச்சமூகத்தை வளர்த்தெடுக்கவும் உங்கள் அனைவரையும் சமூக விஞ்ஞான கற்கை வட்டம் அழைக்கிறது.

சமூக விஞ்ஞான கற்கை வட்டம்
தேசிய கலை இலக்கியப் பேரவை,
571/15. காலி வீதி,
வெள்ளவத்தை

0772307807
0772260165

**Facebook group :**
facebook.com/groups/ssscircle/

வலைத்தளம் :
circle.thulaa.net

## SOPA , PIPA சட்டங்களுக்கு இணையத்தில் எழுந்துள்ள எதிர்ப்பலை

(முன்பக்கத் தொடர்ச்சி)

2. SOPA உண்மையான புலமைச் சொத்துத் திருடர்களுக்கு ஒரு பொருட்டேயல்ல ஆங்கில எழுத்துக்களால் அமைந்த இணையத்தள முகவரிகள் தடுக்கப்படுகின்றனவேயொழிய, அவ்விணையத்தளங்களை அவற்றின் IP முகவரிகளின் மூலம் எப்போதும் அணுக முடியும்.

3. புலமைச் சொத்து தொடர்பாக, அநீதியான, மிக இறுக்கமான நடைமுறைகளை முன்மொழிகின்றது: வருடக்கணக்கான சிறைத்தண்டனைகளும், பெருமளவிலான பணத்தண்டமும்

4. பல சிறிய ரக இணையத்தள வர்த்தக நடவடிக்கைகளைப் பாதிக்கும், அதனால், பெருமளவானோர் வேலையிழக்கலாம், அதுவும் உலகப் பொருளாதாரம் நெருக்கடியடையும் நேரத்தில்.

5. சிறிய இணைய நிறுவனங்களை மட்டுமல்ல, இணையத் தொழிநுட்பங்களில் பாரிய செல்வாக்கு செலுத்துகின்ற, அதன் செல்நெறியை மாற்றுகின்ற மிகப்பெரிய இணைய நிறுவனங்களையும் பாதித்து, இணைய தொழிநுட்ப முன்னேற்றங்களை பாதிக்கும் : Google, Amazon, Wikipedia

6. DNS Sever மீதான சட்ட நடவடிக்கைகளால், இணையத்தில் பாவனையாளர்களின் பாதுகாப்பு கேள்விக்குள்ளாகின்றது: பொது DNS வழங்கிகளில் தடைசெய்யப்பட்ட இணையத்தளங்களை அணுகுவதற்று, இணையத்தில் யாரும் இரகசிய DNS Server களை நிறுவும் போது, அவற்றின் நம்பகத்தன்மை கேள்விக்குள்ளாகின்றது. உதாரணத்துக்கு, ஒரு வங்கியின் முகவரின், தவறான தளத்துக்கு தொடர்புபடுத்தப்பட்டு, பாவனையாளர்கள் ஏமாற்றப்படலாம்.

இணையத்தில் பல்வேறு அரசியல் நிலைப்பாடுடையவர்கள் இச்சட்டத்துக்கு எதிராக போராடியிருக்கிறார்கள். கட்டற்ற மென்பொருள் இயக்கம் போன்ற, அரசியல் ரீதியாகத் தொடர்ச்சியாக இணையத்தில் போராடிவரும் அமைப்புக்களும் கூகிள் போன்ற பெருவணிக நிறுவனங்களும் இப்போராட்டத்தில் ஈடுபட்டுள்ளன. பெருவணிக நிறுவனங்கள் இவ்வாறு போராடுவதற்கான காரணம் என்ன என்பது ஆர்வமூட்டக்கூடிய விடயமாகும். இது இணையத்தை அடிப்படையாகக்கொண்டு எழுதுள்ள புதிய வணிக வடிவத்தைக்கொண்டு வளர்ச்சியடைந்த நிறுவனங்களை தாக்கக்கூடிய சட்டமூலமாகும். மரபான வணிக வடிவத்துக்கும் புதிய இணையம்சார் வணிக வடிவத்துக்கும் எண்ணிம (Digital) உலகில் ஏற்பட்டுள்ள ஒரு முரண்பாடாகவும் இதனைக்கொள்ளலாம்.

## போருக்குப்பின் தமிழ் மக்கள் எதிர்நோக்கும் பிரச்சினைகள்

இந்த வாரம் உரையாடப்படவுள்ள தலைப்பு.
(மாவை. நித்தியானந்தன்)

1. போருக்கு முன் இருந்த நிலைமை


2. போருக்கு பின் ஏற்பட்ட மாற்றங்கள்

3. இம்மாற்றங்களால் மக்களுக்கு ஏற்பட்ட உள ரீதியான, பொருளாதார ரீதியான பாதிப்புகள்.

4. இப்பாதிப்பினுடைய விளைவுகள்

5. இவ்விடயத்தில் பிரதேசங்களுக்கிடையிலான வேறுபாடுகள்

6. செய்யப்படவேண்டிய சமூக நலத்திட்டங்கள் பற்றிய உரையாடல்






சமூக விஞ்ஞான கற்கை வட்டத்தின் செய்தி மடல்களைப் படியெடுக்கவும் அச்சிட்டுப் பகிரவும் அனைவருக்கும் உரிமையுண்டு. இதில் வெளிவரும் ஆக்கங்களை மூலத்தைக் குறிப்பிட்டு எங்கும் பிரசுரிக்கலாம்.
CC BY NC SA